**கம்பம் நகராட்சி**

2021–ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் (31.08.2021) ஆம் நாள் செவ்வாய்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு, கம்பம் நகர்மன்றக் கூட்ட அரங்கில் தனி அலுவலர் தலைமையில் நடைபெறும் சாதாரணக் கூட்டம்.

**கூட்டப் பொருட்கள்**

**1.** நகராட்சி ஆணையாளர் அவர்களின் 08/2021–ஆம் மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:– மன்றம் பதிவு செய்யலாம்.

**2.** நகராட்சி பொறியாளர் அவர்களின் 08/2021 –ஆம் மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:– மன்றம் பதிவு செய்யலாம்.

**3.** கம்பம் நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் காலியாக உள்ள கடை எண்.28–ற்கு வாடகை அடிப்படையில் குத்தகை நடத்திக் கொள்ள 13.08.2021–ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி / ஏலம் கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி இரண்டு நபர்கள் ஏலம் கோரியுள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண். | ஏலதாரர் பெயர் | 2021–2022–ஆம் ஆண்டிற்கு ஏலம் கோரிய தொகை ரூ. | 31.03.2021–ஆம் தேதிய நிலையில் பெறப்பட்ட கடையின் வாடகை ரூ. | நடப்பு வாடகையை விட கூடுதல் |
|---|---|---|---|---|
| 1 | பி. ராஜா | 11000 | 10500 | 500 |
| 2 | கே. ராமநாதன் | 10900 | | 400 |

அலுவலகக்குறிப்பு : – ஏற்கனவே கடை நடத்தி வந்த திருமதி.பி. கண்ணம்மா என்பவர் கடை நடத்த முடியாத காரணத்தால் 31.03.2021 வரை கடையினை நடத்தி 01.04.2021 முதல் நகராட்சி வசம் ஒப்படைத்து விட்டார். கொரோனா காலமாக இருந்ததால் மறுஏலம் கோரப்படாமல் அரசினரின் வழிகாட்டுதலின்படி 13.08.2021–இல் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இதில் திரு.பி. ராஜா என்பவர் நடப்பு வாடகையை விட ரூ.500 கூடுதலாக ஏலம் கோரியுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம். மேலும், 01.09.2021 முதல் கடையினை வாடகை அடிப்படையில் நடத்தி கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**4.** கம்பம் நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்திலுள்ள இருசக்கர வாகனம் நிறுத்துமிடத்திற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு 03.02.2021 , 19.02.2021, 25.06.2021 ஆகிய தேதிகளில் ஒப்பந்தப்புள்ளி /ஏலம் கோரப்பட்டதில் எவரும் ஒப்பந்தப்புள்ளி /ஏலம் கோரி பொறுப்புத்தொகை ஏதும் செலுத்தப்படவில்லை. எனவே 01.04.2021 முதல் துறை ரீதியாக கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் 13.08.2021–ஆம் நாள் நடத்தப்பட்ட நான்காவது மறுஏலத்தில் கீழ்கண்ட விவரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண். | ஏலதாரர் பெயர் | 2021–2022–ஆம் ஆண்டிற்கு ஏலம் கோரிய தொகை ரூ. | கடந்த ஆண்டிற்கான ஏலத்தொகை ரூ. (2020–2021) | மூன்றாண்டு சராசரி | கடந்த ஆண்டை விட குறைவு | மூன்றாண்டு சராசரியை விட குறைவு |
|---|---|---|---|---|---|---|
| 1 | எம்.ஏ. பாஸ்கரன் | 145000 | 658303 | 627453 | 513303 | 482453 |
| 2 | எம். செல்வேந்திரன் | 346500 | | | 311803 | 280953 |

அலுவலகக்குறிப்பு : – மேற்படி உரிமத்திற்கு மூன்று முறை ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டும் ஏலம் கோர யாரும் முன்வரவில்லை. ஆகையால் நகராட்சியின் மூலம் இரண்டு பணியாளர்களை பணியமர்த்தி 01.04.2021 முதல் துறை ரீதியாக வசூலிக்கப்பட்டது. தற்போது கொரோனா பெருந்தொற்று காரணமாகவும் இரண்டு பணியாளர்களுக்கு மாத சம்பளம் தலா ரூ.40,000/– (20000 x 2=40000 x 12=480000) வீதம் வருடத்திற்கு ரூ.4,80,000/– செலவினம் ஏற்படும் என்பதாலும் நாள் ஒன்றுக்கு குறைந்த பட்ச அளவில் கட்டணம் வசூலிக்கப்படுவதாலும் நகராட்சிக்கு பெரும் நிதியிழப்பு ஏற்படுவதை தவிர்க்க ரூ.346500/–க்கு கூடுதல் ஒப்பந்தப்புள்ளி கொடுத்த திரு. எம். செல்வேந்திரன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம் என தெரிவித்தன் அடிப்படையில் அன்னாருக்கு 2021–2022–ஆம் ஆண்டிற்கான உரிமத்தினை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**5.** அரசாணை (நிலை) எண்.28 சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை (சந7(1) நாள்.20.02.2021–இல் நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிட்டுள்ளபடியும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித்திட்டப்பணிகள் திட்ட அலுவலகம், தேனி அவர்களின் கடிதம் ந.க.எண்.377/அ2/2021 நாள்.29.07.2021–இல் தெரிவித்துள்ளவாறு, கம்பம் மெட்டு காலனியில் உள்ள அங்கன்வாடி மையத்தில் ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : – மன்றம் அனுமதிக்கலாம்.

**7.** இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு 3, எல்.எப் ரோட்டில் உள்ள சொத்து வரிவிதிப்பு எண்.122/16033 மற்றும் வார்டு 8, செக்கடித்தெருவில் உள்ள வரிவிதிப்பு எண்.122/008/00514 ஆகிய இரு சொத்துக்களுக்கும், சொத்தின் அபிவிருத்தியின் அடிப்படையில் கூடுதலாக வரிவிதிப்பு செய்யப்பட்டு, அதற்கான தொகையினை செலுத்தக்கோரி அறிவிப்பு அனுப்பப்பட்டது. மேற்படி அறிவிப்பின் அடிப்படையில் மனுதாரரான திரு.எம்.கே.எம். அமீர்ஹம்ஸா என்பவர் வரிவிதிப்பினை ஆட்சேபனை செய்து சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் WP (MD) No.7539 of 2021 and WP (MD) No.5708 of 2021 என்ற எண்ணில் வழக்கு தொடர்ந்து மேற்படி அறிவிப்பின்படி நடவடிக்கை மேற்கொள்ள தடையாணை பெற்றுள்ளார். மேற்படி தடையாணையினை விலக்கி வழக்கினை நடத்தி உயர்நீதிமன்ற மதுரை கிளையில் உரிய உத்திரவு பெற்று தர இந்நகராட்சி நிலைய வழக்கறிஞர் திரு.ஹேமா கார்த்திகேயன் வசம் ஒப்படைப்பு செய்யப்பட்டது. மேற்படி வழக்கினை நடத்திட வழக்கறிஞர் கட்டணமாக ரூ.20,000/– கோரியுள்ளார். மேற்படி தொகையினை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலகக்குறிப்பு : – | மன்றம் அனுமதிக்கலாம். |

**8.** கம்பம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.12 தாத்தப்பன்குளம் 4வது தெரு முதல் தாத்தப்பன்குளம் 10வது மற்றும் 13வது தெரு சந்திப்பு வரையுள்ள சேனை ஓடையில் பல வருடங்களாக சென்று கொண்டிருந்த மழைநீர் ஓடைகள் மழைகாலங்களில் மண் மற்றும் குப்பைகள் சேர்ந்து மக்கி நாளடைவில் மழைநீர் செல்ல முடியாமல் பொதுமக்களின் குடியிருப்பு சேதமடையக்கூடிய சூழ்நிலையில் உள்ளது. எனவே மேற்குறிப்பிட்ட பகுதிகளில் சேகரமாகியுள்ள குப்பைகள் மற்றும் மண் ஆகியவற்றை இயந்திரம் மூலம் அகற்றுவதற்கு ஆகும் உத்தெச மதிப்பீடு ரூ.5,50,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு : – | 1) மன்றம் அனுமதிக்கலாம் |
| | 2)அவசர அவசியம் கருதி தனி அதிகாரியின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோருவதை மன்றம் அனுமதிக்கலாம். |
| | 3)மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். |

**9.** கம்பம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.12 கம்பம் மெட்டு பிரதான சாலை முதல் தாத்தப்பன்குளம் 4வது தெரு வரை உள்ள சேனை ஓடையில் பல வருடங்களாக சென்று கொண்டிருந்த மழைநீர் ஓடைகள் மழைகாலங்களில் மண் மற்றும் குப்பைகள் சேர்ந்து மக்கி நாளடைவில் மழைநீர் செல்ல முடியாமல் பொதுமக்களின் குடியிருப்பு சேதமடையக்கூடிய சூழ்நிலையில் உள்ளது. எனவே மேற்குறிப்பிட்ட பகுதிகளில் சேகரமாகியுள்ள குப்பைகள் மற்றும் மண் ஆகியவற்றை இயந்திரம் மூலம் அகற்றுவதற்கு ஆகும் உத்தெச மதிப்பீடு ரூ.6,50,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு : – | 1) மன்றம் அனுமதிக்கலாம் |
| | 2)அவசர அவசியம் கருதி தனி அதிகாரியின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோருவதை மன்றம் அனுமதிக்கலாம். |
| | 3)மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். |

**10.** இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் உள்ள கீழ்கண்ட வாகனங்களுக்கு இன்சூரன்ஸ் காலம் முடிவடைவதால் 2021–22 –ஆம் ஆண்டிற்கான வாகன இன்சூரன்ஸ் கட்டண தொகை UNITED INDIA INSURANCE CO.LTD கணக்கீட்டுத்தாள் படி ரூ. 2,60,152/–ஐ செலுத்த மன்ற அனுமதி கோரப்படுகிறது.

| | | |
|---|---|---|
| TN 60 T 4507 | = ரூ | 31520 |
| TN 60 T 4504 | = ரூ | 31520 |
| TN 60 T 4524 | = ரூ | 31520 |
| TN 60 Z 3591 | = ரூ | 30227 |
| TN 60 Y 1959 | = ரூ | 17783 |
| TN 60 AW 8353 | = ரூ | 19406 |
| TN 60 AW 8375 | = ரூ | 19406 |
| TN 60 AW 8347 | = ரூ | 19406 |
| TN 60 AV 2482 | = ரூ | 19788 |
| TN 60 AV 2490 | = ரூ | 19788 |
| TN 60 AV 2496 | = ரூ | 19788 |
| மொத்தம் | = ரூ | 260152 |

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு : – | 1) மன்றம் அனுமதிக்கலாம் |
| | 2)அவசர அவசியம் கருதி தனி அதிகாரியின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோருவதை மன்றம் அனுமதிக்கலாம். |

| | | |
|---|---|---|
| **11.** | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு B, பிளாக்–11, சர்வே எண்.10–இல் திருமதி.கோ. சரோஜா என்பவருக்கு சொந்தமான இடத்தை அத்துமால் அளக்க எதிர்ப்பு தெரிவித்து திரு.கே.சக்திவேல் என்பவர் தொடர்ந்த வழக்கு எண்.WP(MD)No.11040/2021–இல் இந்நகராட்சி சார்பாக ஆஜராகி வழக்கை நடத்தியதற்காக வழக்கறிஞர் திரு. கே.ஹேமகார்த்திகேயன் அவர்களுக்கு வழக்கறிஞர் கட்டணமாக ரூ.10000/– (பத்தாயிரம் மட்டும்) செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | |
| | அலுவலகக் குறிப்பு : – | மன்றம்அனுமதிக்கலாம் (ந.க.எண்.624/2021/எப்1) |
| **12.** | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு A, பிளாக்–18, சர்வே எண்.47–இல் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றக்கோரி திரு. வீ. ராஜாங்கம் என்பவர் தொடர்ந்த வழக்கு எண்.WP(MD)No.25524/2019–இல் இந்நகராட்சி சார்பாக ஆஜராகி வழக்கை நடத்தியதற்காக வழக்கறிஞர் திரு. கே.ஹேமகார்த்திகேயன் அவர்களுக்கு வழக்கறிஞர் கட்டணமாக ரூ.10000/– (பத்தாயிரம் மட்டும்) செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | |
| | அலுவலகக் குறிப்பு : – | மன்றம்அனுமதிக்கலாம் (ந.க.எண்.3218/2019/எப்1) |
| **13** | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு A, பிளாக்–22, சர்வே எண்.15/3–இல் உள்ள இடம் தொடர்பாக திரு. எம். அகமதுசுபேர் என்பவர் தொடர்ந்த வழக்கு எண்.WP(MD) No.7162–இல் இந்நகராட்சி சார்பாக ஆஜராகி வழக்கு நடத்தி வரும் வழக்கறிஞர் திரு. கே.ஹேமகார்த்திகேயன் அவர்களுக்கு வழக்கறிஞர் கட்டணமாக ரூ.10000/– (பத்தாயிரம் மட்டும்) செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | |
| | அலுவலகக் குறிப்பு : – | மன்றம்அனுமதிக்கலாம் (ந.க.எண்.804/2021/எப்1) |
| **14.** | கம்பம் நகராட்சி பகுதியில் கொரானோ வைரஸ் ( COVID-19) நோய் தொற்று பரவுவதை தடுக்கும் பொருட்டு பொது சுகாதார நலன கருதி கொரானோ நோய் தொற்று விழிப்புணர்வு மற்றும் தடுப்பு நடவடிக்கைகளுக்கு 20.07.2021–ஆம் நாளன்று தினசங்கு நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டுள்து. மேற்படி விளம்பரம் செய்த வகையில் ரூ.15,500/– பில் வரப்பெற்றுள்ளதை செலுத்த மன்றப்பொருள் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | |
| | அலுவலகக் குறிப்பு : – | மன்றம்அனுமதிக்கலாம் (ந.க.எண்.109/2020/எப்1) |
| **15.** | இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு கம்பம் நகர் பகுதியில் தற்போது மழைகாலமாக உள்ளதாலும், அருகில் உள்ள மாவட்டங்களில் டெங்கு காய்ச்சல் பரவி வருவதாலும், கம்பம் நகராடசி பகுதிகளில் டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுப்பதற்காகவும், டெங்கு தடுப்பு பணிகளுக்கு பயன்படுத்தப்படும் 1) பைரீத்திரம் 2% 2) அபேட் – டெமிபாஸ் 50% 3) நிலவேம்பு சூரண பவுடர் ஆகியன தேவைப்படுவதால் அதனை அரசு மற்றும் அனுமதி பெற்ற நிறுவனத்தில் வாங்கி வழங்குவதற்கும் தோராயமாக 2021–22 ஆம் ஆண்டிற்கு ஆகும் உத்தேச செலவு ரூ.10.00 இலட்சம் (ரூபாய் பத்து இலட்சம்) நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | |
| | அலுவலகக் குறிப்பு : – | 1) மன்றம் அனுமதிக்கலாம் |
| | | 2) பொது சுகாதார பிரிவு அவசர அவசியம் கருதியும் ஆணையாளர் மற்றும் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று அரசு நிறுவனம் மற்றும் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்யவும் மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1956/2021/எச்1) |
| **16.** | M/s Relyon Facility Service Pvt Ltd என்ற நிறுவனத்திற்கு இவ்வலுவலக உத்தரவு ந.க.எண் : 4468/2018/ எச்1 நாள் 27.02.2020 –இல் பணி உத்தரவு வழங்கப்பட்டு 29.02.2020 முதல் பணியை துவங்கி பணி செய்து கடந்த 28.02.2021 உடன் ஒப்பந்தம் முடிவடைந்ததால் அடுத்த காலத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெற நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.இந்நிலையில் தேர்தல் நடத்தை விதிகள் அமுலில் இருந்த காரணத்தினால் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு இறுதி செய்வதற்க சிறுது காலமாகுமென்பதால் துப்புரவு பணிகள் பாதிப்படையாமல் இருப்பதற்கு ஏதுவாக தற்போது M/s Relyon Facility Service Pvt Ltd நிறுவனத்துடன் செய்துள்ள ஒப்பந்தத்தை மூன்று மாத காலத்திற்கு ஒப்பந்த நீடிப்பு வழங்கப்பட்டது.தற்போது வரை மேற்படி அனுமதிபெறப்படததாலும் கொரானா நோய் தொற்று காரணமாக ஊரடங்கு அமுலில் உள்ளதாலும் மேற்கண்ட அனுமதியை எதிர்நோக்கி பொது சுகாதார நலன் கருதி மேலும் ஒரு மாத காலத்திற்கு கால நீடிப்பு 30.09.2021 வரை வழங்காலம். ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மற்றும் விலை விகிதத்தில் பணி உத்தரவு வழங்குவதற்கும் உத்தேச செலவினத்தொகை ரூ10.00இலட்சத்திற்கும் மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது. | |
| | அலுவலகக் குறிப்பு : – | நிர்வாக நலன் கருதியும் பொது சுகாதார நலன் கருதியும் துப்புரவு பணிகள் பாதிப்படையாமல் இருப்பதற்கு ஏதுவாக தற்போது துப்புரவு பணியாளர்களை வழங்கி வரும் M/s Relyon Facility Service Pvt Ltd நிறுவனத்துடன் செய்துள்ள ஒப்பந்தத்தை 01.09.2021 முதல் ஒரு மாத காலத்திற்கு கால நீடிப்பு செய்யலாம் அதற்கான செலவினத்திற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம். (ந.க.எண்.4468/2018/எச்1) |

| | | |
|---|---|---|
| **17.** | M/s Relyon Facility Service Pvt Ltd என்ற நிறுவனத்திற்கு இவ்வலுவலக உத்தரவு ந.க.எண் : 3963/2018/எச்1 நாள்.27.02.2020 –இல் பணி உத்தரவு வழங்கப்பட்டு 29.02.2020 முதல் பணியை துவங்கி பணி செய்து கடந்த 28.02.2021 உடன் ஒப்பந்தம் முடிவடைந்ததால் அடுத்த காலத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு தேர்தல் நடத்தை விதிகள் அமுலில் இருந்ததால் கோரவில்லை தற்போது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. தற்சமயம் பணிகள் பாதிப்படையாமல் இருப்பதற்கு ஏதுவாக M/s Relyon Facility Service Pvt Ltd நிறுவனத்துடன் செய்துள்ள ஒப்பந்தத்தை பொது சுகாதார நலன் கருதி மேலும் ஒரு மாத காலத்திற்கு காலநீடிப்பு (30.09.2021 வரை) செய்து வழங்காலாம்.ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மற்றும் விலை விகிதத்தில் பணி உத்தரவு வழங்குவதற்கும் உத்தேச செலவினத்தொகை ரூ.6.00 இலட்சத்திற்கும் மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது. | |
| | அலுவலகக் குறிப்பு : – | நிர்வாக நலன் கருதியும் சுகாதார நலன் கருதியும் பணிகள் பாதிப்படையாமல் இருப்பதற்கு ஏதுவாக தற்போது பணியாளர்களை வழங்கி வரும் M/s Relyon Facility Service Pvt Ltd நிறுவனத்துடன் செய்துள்ள ஒப்பந்தத்தை 01.09.2021 முதல் ஒரு மாத காலத்திற்கு கால நீடிப்பு செய்யலாம் அதற்கான செலவினத்திற்கும்மன்றம்ஒப்புதல்வழங்கலாம். (ந.க.எண்.3963/2018/எச்1) |
| **17.** | M/s UK security Service, Chennai என்ற நிறுவனத்திற்கு இவ்வலுவலக உத்தரவு ந.க.எண் : 3767/2019/ எச்1 நாள் 29.05.2020 –இல் பணி உத்தரவு வழங்கப்பட்டு 01.06.2020 முதல் பணியை துவங்கி பணி செய்து கடந்த 28.02.2021 உடன் ஒப்பந்தம் முடிவடைந்ததால் அடுத்த காலத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெற நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.இந்நிலையில் தேர்தல் நடத்தை விதிகள் அமுலில் இருந்த காரணத்தினால் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு இறுதி செய்வதற்க சிறுது காலமாகுமென்பதால் துப்புரவு பணிகள் பாதிப்படையாமல் இருப்பதற்கு ஏதுவாக தற்போது M/s UK security Service, Chennai நிறுவனத்துடன் செய்துள்ள ஒப்பந்தத்தை மூன்று மாத காலத்திற்கு ஒப்பந்த நீடிப்பு வழங்கப்பட்டது.தற்போது வரை மேற்படி அனுமதிபெறப்படததாலும் கொரானா நோய் தொற்று காரணமாக ஊரடங்கு அமுலில் உள்ளதாலும் மேற்கண்ட அனுமதியை எதிர்நோக்கி பொது சுகாதார நலன் கருதி மேலும் ஒரு மாத காலத்திற்கு கால நீடிப்பு 30.09.2021 வரை வழங்காலம். ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மற்றும் விலை விகிதத்தில் பணி உத்தரவு வழங்குவதற்கும் உத்தேச செலவினத்தொகை ரூ15.00இலட்சத்திற்கும் மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது. | |
| | அலுவலகக் குறிப்பு : – | நிர்வாக நலன் கருதியும் பொது சுகாதார நலன் கருதியும் துப்புரவு பணிகள் பாதிப்படையாமல் இருப்பதற்கு ஏதுவாக தற்போது துப்புரவு பணியாளர்களை வழங்கி வரும் M/s UK security Service, Chennai நிறுவனத்துடன் செய்துள்ள ஒப்பந்தத்தை 01.09.2021 முதல் ஒரு மாத காலத்திற்கு கால நீடிப்பு செய்யலாம் அதற்கான செலவினத்திற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம். (ந.க.எண்.3767/2019/எச்1) |

ஒப்பம்/– திரு. மெ. சரவணகுமார்
ஆணையாளர்,
கம்பம் நகராட்சி.

நாள். 31.08..2021
இடம். கம்பம்